25-9-2019

மக்கள் குரல்



தாய்லாந்து நாட்டின் ஹூவா ஹின் பகுதியிலுள்ள ஸ்டாம்போர்ட் பன்னாட்டு பல்கலைக்கழகம் சார்பில் கடந்த 7 மற்றும் 8 ஆம் தேதிகளில், "நீடித்து நிலைக்கும் தொழில்நுட்பம் மூலம், சமூக புத்தாக்கத்துக்கான இளைஞர்களின் முயற்சி" (IEEE YESIST'12) எனும் தலைப்பில் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், "உலகின் உண்மையான பிரச்சினைகளை தீர்ப்பது குறித்த இளம் தொழில்முறை அறிஞர்களின் புதிய சிந்தனைகள்" எனும் சர்வதேச திறன் வெளிப்படுத்தும் போட்டிகளில், 20 நாடுகளின் 450 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். புத்தாக்க சாதனை, 'மேக்கர் பேர் டிராக்', ஜூனியர் ஐன்ஸ்டீன் டிராக் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில், "மேக்கர் பேர் டிராக்" பிரிவில் கலந்து கொண்ட புனித ஜோசப் பொறியியல் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் ஜே.ஸ்ரீனிவாசன், எம்.ஸ்ரீவத்சவன், எஸ்.ஜே.சுதர்ஷன் மற்றும் எம்.விக்னேஷ் பூபதி ஆகியோர், "இம்பேலன்ஸ் ரெகுலேட்டர்" என்னும் தலைப்பில், திட்ட அறிக்கையை அளித்து, சாம்பியன் பட்டத்தை பெற்றனர்.

101019